# தொல்காப்பியரின் வனப்புக் கோட்பாடும் பிற்கால இலக்கண நூல்களும்

# Tholkappiyar's Vanappu theory and later grammars

**முனைவர் பா.ராஜபாண்டி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, முத்துப்பேட்டை.

**Dr P.Rajapandi**, Assistant Professor, Department of Tamil, Caussanel College of Arts and Science, Muthupettai.

**DOI : 10.5281/zenodo.4662233**

## Abstract

Eight types of vanappu were first mentioned in the Tolkappiyam, the development of the forest extends to later grammars such as Yaparungalam, Yaparungalakarikai, Yaparungala Viruthi, Tandiyalankaram, Veerasozhiyam, Maranalankaram. In that sense, Tolkappier's theory of the vanappu developed into later grammars. Therefore, the grammar of numerous vanappu, the stages of development in later grammars, their similarities and differences are very clearly spoken.

**ஆய்வுச்சுருக்கம்**

எட்டு வகையான வனப்பு முதலில் தொல்காப்பியத்தில் பேசப்பட்டிருந்தாலும் பிற்காலத்தில் தோன்றிய இலக்கண நூல்களான யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கல விருத்தி, தண்டியலங்காரம், வீரசோழியம், மாறனலங்காரம் போன்ற பல்வேறு நூல்களில் வனப்பின் வளர்ச்சிநிலை நீண்டு செல்கின்றது. அந்த வகையில் தொல்காப்பியர் கூறிய வனப்பு கோட்பாடாக உருவெடுத்து பிற்கால இலக்கணநூல்களில் வளர்ச்சியும் பெற்றுள்ளது. ஆகவே, எண்வகை வனப்புகளின் இலக்கணம், பிற்கால இலக்கணநூல்களில் வளர்ச்சி நிலைகள், அவற்றின் ஒற்றுமை, வேற்றுமைகள் மிகத்தெளிவாகப் பேசப்பட்டுள்ளன.

**Keywords : vanappu, tholkappiyar, grammar, theory**

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் எட்டாவது இயலான செய்யுளியலில் தம் காலத்தில் பாடப்பட்டுள்ள இலக்கணங்களையும், தமக்குமுன் பாடப்பட்டிருந்த செய்யுள் இலக்கணங்களையும் முறைப்படி எடுத்துரைத்துள்ளார். இதற்கு 'முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணித் தொல்காப்பியத்தை இயற்றினார்' என்ற சொற்பொருள் பொருத்தமாகும். ஆனால் அவர் காலத்திற்குப் பின் எழுந்த இலக்கியங்களும், செய்யுளுக்குரிய இலக்கண நெறிகளும் பற்பல மாறுபாட்டை அடைந்துள்ளன. அவற்றையெல்லாம் செய்யுளியலில் காண முடியவில்லை.

செய்யுளியல் முதற்நூற்பாவில் மாத்திரை முதல் வண்ணம் ஈறாகச் சொல்லப்பட்ட முதல் இருபத்தாறு உறுப்புகளையும், பின்னிறுதியாகக் கூறப்பட்ட வனப்புகளான அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு போன்ற எட்டு உறுப்புகளையும் சேர்த்து

மொத்தம் முப்பத்துநான்கு உறுப்புகள் என்று கூறி, பின் அவற்றைப் பற்றி ஒவ்வொன்றாக விளக்கிச் செல்கின்றார். தொல்காப்பியர் பின்னிறுதியாகக் கூறிய இந்த எட்டு உறுப்புகளைப் பேராசிரியர் 'வனப்பு' என்ற பெயரால் அழைக்கின்றார். வனப்பு என்பது அழகு எனப் பொருள்படும். அதாவது பல்வகை உறுப்புகள் ஒன்று சேர்ந்து உருவாகும் அழகே வனப்பாகும். இவ்வனப்புகள் பல்வேறுபட்ட உறுப்புகளின் கலவையாக இருப்பதால் ஒரு செய்யுளின் முழுமையான பாடுபொருள் நிலையினையும், அதன் அமைப்பினையும் எடுத்தோதுகின்றன. எனவே, தொல்காப்பியர் கூறிய எண்வகை வனப்புகள், பிற்கால இலக்கண நூல்களில் வளர்ச்சி நிலைகளின் வேறுபாடுகளை ஆராய்ந்து வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**வனப்புக் கோட்பாடு**

வனப்பு என்பது அழகு, அலங்காரம் எனப் பொருள்படும். அவை எட்டு வகைப்படும். இதனைத் தொல்காப்பியர் செய்யுளியலில்,

**"அம்மை யழகு தொன்மை தோலே**
**விருந்தே யியைபே புலனே யிழைபெனாஅப்**
**பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ**
**நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென**
**வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே"** **(தொல்.பொருள்.செய்.பேரா.நூ.313)**

என்ற நூற்பாவில் 'பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ' என்று வனப்பினைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இவ்வனப்பின் இலக்கணங்கள் தமிழ் இலக்கியச் செய்யுளின் அழகினையும், அழகுணர்ச்சியின் அமைப்பினையும் விளக்கும் விதமாக அமைகின்றன.

யாப்பருங்கலம் வனப்பினைப் பற்றிக் கூறும்போது,

**"அம்மை முதலிய ஆயிரு நான்மையும்"** **(யாப்.நூ.95)**

என்று கூறுகின்றது. ஆனால் அம்மை முதலானவற்றிற்கு வனப்பு என்ற பெயர் கூறவில்லை. விருத்தியுரையாசிரியர் 'அம்மை முதலிய எட்டு யாப்பலங்காரம்' என்று உரை கூறுகின்றார். பின் அவற்றை விளக்கும்போது அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என இவை எட்டும் கொள்க என்று கூறுகின்றார். யாப்பருங்கலக்காரிகை,

**"மருள்தீர் விகாரம் வகையுளி வாழ்த்து வசை வனப்பு"** **(யாப்.கா.நூ.43)**

என்ற அடியில் 'வனப்பு' என்ற ஒன்றினைக் கூறுகின்றது. வனப்பு என முன்னே கூறிவிட்டுப் பின் அதன் உரையில் வனப்பு எட்டு வகைப்படும். அவை அம்மை முதல் இழைபு என எடுத்துரைக்கின்றது. மேலும் அம்மை முதலானவற்றை வனப்பென்று குறிப்பதுடன் இளம்பூரணர் கொண்ட பாடம் அமைந்த நூற்பாவையே எடுத்துக் காட்டுவதை உணரமுடிகின்றது. திருவள்ளுவமாலையில்,

**"வழுக்கில் வனப்பணி வண்ணம் - இழுக்கின்றி"** **(திரு.மா.பா.45)**

என்ற பாட்டில் 'வனப்பு' என்பது குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. வனப்பணி என்பது வனப்பு ஒரு அணி எனும் பொருள் உணர்த்தும். வனப்பும் அணியும் அலங்காரத்தைக் குறிக்கும் சொற்கள் ஆகும்.

வீரசோழியம் என்னும் நூல் செய்யுளுக்குரிய பத்து ஆவிகளைக் குறிப்பிடும்போது 'காந்தி' என்ற ஒன்றினைக் கூறுகின்றது. காந்தி என்பது 'யாப்பு வனப்பு' எனக் கொள்க என்றும், அதுவே தமிழில் பல கூறுபட்டுப் பிரிந்து வனப்பு என்று அமைந்துள்ளதையும், வனப்பிற்கு காந்தி என்ற பெயரும் உண்டு என்பதை,

**"ஆனா அழகினைக் காந்தியென் கின்ற ததுதமிழ்**
**நானா விதமாய் நடைபெற் றியலும்"** **(வீர.சோ.பா.எ.151)**

என்ற பாடல் விளக்கும் கருத்தின் அடிப்படையில் விளங்கிக்கொள்ள முடியும். இக்கருத்தின் அடிப்படையில் அழகிற்கு காந்தி என்ற பெயரும் காந்தி என்பது 'வனப்பு' என்ற பெயரும் கொண்டிருப்பதை அறிய முடிகின்றது. இலக்கணவிளக்கம் என்னும் இலக்கண நூலானது எண்வகை வனப்பினைப் பற்றி எடுத்தோம்புகின்றது. இதனை,

**"அம்மை அழகு தொன்மை தோலே**
**விருந்தே இயைபே புலனே இழைபுஎனப்**
**…………………………………………**
**இழைபுஎனப் படுதலும் எய்தும் என்ப."** **(இல.வி.நூ.754)**

என்ற நூற்பா மூலம் அறியலாம்.

**சுவாமிநாதம் வனப்பு பற்றி விளக்கும்போது,**

**"ஆர்வனப்பு வகையுளியாம் முதுசொல் வசை"** **(சுவாமி.நூ.161)**

என்ற நூற்பா மூலம் புலப்படுத்துகின்றது.

**வனப்பு - அமைப்பு முறை**

தொல்காப்பியர் யாப்புக்கும் மொழிக்கும் உள்ள தொடர்பைச் செய்யுள் என்ற சொல்லால் இணைத்துக் கூறுகின்றார். தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலும் அகக் கருவிகளை இணைத்தே ஒரு இலக்கியத்தின் திணை பாடப்பட்டு வருகின்றது. அந்த வகையில் ஒரு இலக்கியத்தின் படைப்புக் கருவியாகிய வடிவம், யாப்பு போன்றவற்றிற்கு அடுத்த மூன்றாவது நிலையில் வனப்பு அமைந்துள்ளது என்பதை உணரலாம். வனப்புறுப்புகளான எண்வகை வனப்புகள் ஒரு செய்யுளின் அக உறுப்பின் இலக்கணங்களைப் பற்றிப் பேசுவதால் அவ்வனப்புகளை அகக் கருவிகள் என்ற அமைப்பில் கொண்டு வரலாம். இவ்வனப்புறுப்புகள் தொல்காப்பியரின் இரண்டாம் நிலைச் செய்யுளாக அமைந்துள்ளன. இவ்வனப்புகளைத் தவிர, தொல்காப்பியர் கூறிய மற்ற இருப்பத்தாறு

செய்யுள் உறுப்புகளும் முதல்நிலைச் செய்யுளாக அமைந்துள்ளன. தொல்காப்பியத்தில் எண்வகை வனப்புகள் செய்யுளியலிலும் பிற்கால இலக்கண நூல்களில் ஒழிபியலிலும், யாப்பியலிலும் அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது. வனப்பானது பல்வேறுபட்ட உறுப்புகளின் முழுமையான பாடுபொருள் நிலையினையும் அதன் யாப்பியல் அமைப்பினையும் எடுத்தியம்புவதாக அமைகின்றன. எனவே, ஒரு செய்யுளின் உட்கட்டமைப்புகளின் அழகு அல்லது ஒரு செய்யுளை உறுப்பமைவு நிலையில் முழுமையாகப் பார்ப்பதன்வழி சுவைக்கும் அழகு வனப்பின் இலக்கணமாக அமைகின்றது.

**தொல்காப்பியரின் எண்வகை வனப்புகள்**

தொல்காப்பியரின் முப்பத்துநான்கு செய்யுள் உறுப்புகளில் பின்னிறுதியாகக் கூறப்பட்ட எட்டு உறுப்புகள் வனப்பு என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது.

**அம்மை வனப்பு**

தொல்காப்பியரின் எண்வகை வனப்புகளில் முதல் வனப்பு அம்மை எனும் வனப்பாகும். அம்மை வனப்பு என்பது மெல்லிய சொற்களாலும், குறைந்த அடிகளாலும் பாடப்படும் இலக்கிய வகையாகும். இதனைத் தொல்காப்பியர்,

**“வனப்பியல் தானே வகுக்குங் காலை**
**சின்மென் மொழியால் தாய பனுவலொடு**
**அம்மை தானே அடிநிமிர் வின்றே”** **(தொல்.பொருள்.செய்.பேரா.நூ.547)**

என்ற நூற்பா மூலம் விளக்குகின்றார். இளம்பூரணர், “சிலவாய, மெல்லியவாகிய மொழியினானே தொடுக்கப்பட்ட அடிநிமிர்வில்லாத செய்யுள் அம்மையாம்”(இளம் உரை, அடிகளாசிரியர் பதிப்பு,ப.415) என்பர். அதாவது சின்னச் சின்ன சொல்லால் சீர்புனைந்து, நீண்ட அடிகள் அல்லாமல் பாடப்படும் செய்யுள் அம்மை என்று கூறுகின்றார். பேராசிரியர், “சிலவாய மெல்லியவாய சொல்லோடு இடையிட்டு வந்த பனுவலிலக்கணத்தோடு அடிநிமிர்வில்லது அம்மையாம்” (பேரா உரை, இளவழகனார் பதிப்பு, ப.277) என்பர். இவர் அடிநிமிர்வில்லது என்பதற்குக் குறைந்த அடிகளை உடைய செய்யுள் போல பல செய்யுள் தொடர்ந்து வரும் என்றும், ஐந்தடிக்குள் உட்பட்டு வரும் என்றும் கூறுகின்றார். மேலும் இவர், “அம்மை என்பது குணப்பெயர். அமைதிப்பட்டு நிற்றலின் அம்மை என்றாயிற்று” (பேரா உரை, இளவழகனார் பதிப்பு, ப.277) என்பர்.

யாப்பருங்கலம், “அம்மையாவது சிலவாய மெல்லிய சொற்களால் ஒள்ளிய பொருள்மேற் சிலவடியான் சொல்லப்படுவது. மேலும் தனிச் செய்யுள் அம்மையால் அழகு பெறும்” (யாப்பருங்கலம்,ப.141) என்று கூறுகின்றது.

தொல்காப்பியத்தில் அம்மை வனப்பினை விளக்கும் நூற்பாவில்,

**“சின்மென் மொழியால் தாய பனுவலொடு”** **(தொல்.பொருள்.செய்.பேரா.நூ.547)**

என்ற அடியும்,

**"சின்மென் மொழியாற் சீர்புனைந்து யாப்பின்" (தொல்.பொருள்.செய்.இளம்.நூ.227)**

என்ற அடியும் காணப்படுகின்றது. இவ்வடிக்குப் பதிலாக யாப்பருங்கலத்தில்,

**'சின்மென் மொழியால் சீரிது நுவலின்' (யாப்.நூ.95)**

என்ற அடி இடம்பெற்றுள்ளது. இங்கு 'சீரிது நுவலின்' என்று பாடம் கொண்டு 'ஒள்ளியவாய பொருண்மேல்' என்று உரை கூறுகின்றது. மேற்கூறிய கருத்துகளை ஏற்றுக்கொண்ட யாப்பருங்கலக்காரிகையிலும், யாப்பருங்கல விருத்தியுரையிலும்,

**"சின்மென் மொழியாற் சீர்புனைந்து யாப்பின்" (யாப்.காரிகை.தமிழ்.ப.2,3)**

என்ற அடி உள்ளதே தவிர தொல்காப்பியம், யாப்பருங்கலம் கூறிய பாடம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே யாப்பருங்கலக்காரிகையிலும், யாப்பருங்கல விருத்தியுரையிலும் ' சீர்புனைந் தியாப்பின்' என்ற அடி பயின்று வந்துள்ளதை உணரமுடிகின்றது.

எனவே, தொல்காப்பியம் கூறிய அம்மைவனப்பிற்கான நூற்பாவின் முதல் அடியானது பிற்கால இலக்கண நூல்களில் மாற்றம் பெற்றுள்ளது. இம்மாற்றத்தினைக் கொண்டு அம்மைவனப்பானது சில சொற்களால் ஒள்ளியவாய பொருண்மேல் அமையும் இலக்கியம் என்று பொருள் கூறுவது பொருத்தமுடையதாகும்.

**அழகு வனப்பு**

செய்யுளுக்குரிய தேர்ந்த சொல்லால் சீர்புனைந்து யாப்பது அழகு வனப்பு எனப்படும். அதாவது இலக்கியச் செய்யுள் பாடும் புலவன் தான் சொல்லவரும் பொருண்மையைத் தேர்ந்த இலக்கியச் சொற்களால் ஓசையுடன் அழகுபெறப் பாடி முடிக்கும் செய்யுள் வகை அழகு வனப்பு ஆகும். இதனைத் தொல்காப்பியர்,

**"செய்யுள் மொழியால் சீர்புனைந் தியாப்பின்**
**அவ்வகை தானே அழகெனப் படுமே" (தொல்.பொருள்.செய்.பேரா.நூ.548)**

என்ற நூற்பாவின் மூலம் சுட்டுகின்றார். இளம்பூரணர், "செய்யுட்குரிய சொல்லினால் சீரைப் புணர்த்துத் தொடுப்பின் அவ்வகைப்பட்ட செய்யுள் அழகு எனப்படும்" (இளம் உரை, அடிகளாசிரியர் பதிப்பு,ப.419) என்கிறார். செய்யுள் மொழியால் வருவது அழகு வனப்பு என்று தொல்காப்பியர் கூறுவதால் இவ்வகை வனப்பில் வழக்குச் சொற்கள் வருதல் கூடாது என்பதை உணர முடிகின்றது. செய்யுள் மொழி என்பது இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் போன்றவற்றைக் குறிக்கும். பேராசிரியர், "திரிசொல் பயிலாது செய்யுளுட் பயின்றுவரும் மொழிகளைச் சீரறுத்துப் பொலிவுபட யாப்பின் அப்பொருள் அழகு எனப்படும்" (பேரா உரை, இளவழகனார் பதிப்பு, ப.278) என்று கூறுவார். இவர்,

பிற்கால இலக்கண நூலான யாப்பருங்கலம், "அழகாவது செய்யுளுக்கே உரிய திரிசொற்களால் ஓசை இனியதாகப் புணர்க்கப்படுவது" (யாப்பருங்கலம்,ப.141) என்று

எடுத்துரைக்கின்றது. இக்கருத்தினையே, "யாப்பருங்கலக்காரிகையும்" (தமிழண்ணல் உரை.ப.2,2), "யாப்பருங்கல விருத்தியுரையும்"(ப.398) முன்மொழிந்து கூறுகின்றன. இதன் இலக்கண அமைப்பிற்கு சங்கத்தொகை நூல்களில் குறுந்தொகை, ஐங்குறுநூறு போன்ற நூல்களைத் தவிர்த்து, மற்ற நூல்களைச் சான்றாகக் கூறியுள்ளன. ஆனால் குறுந்தொகையில் நூற்றுக்கு எழுபது பாடல்களும், ஐங்குறுநூற்றில் நூற்றுக்கு ஐம்பத்தைந்து பாடல்களும் செய்யுள் மொழியினால் சீர்புனைந்து ஓசையினிதாக நன்கு பாடப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. எனவே, குறுந்தொகை, ஐங்குறுநூறு போன்ற நூல்களைத் தவிர்த்து, மற்ற நூல்களைச் சான்றாகக் கூறுதல் மறுக்கத்தக்கதாகும்.

தொல்காப்பியர் கூறிய வனப்புக் கோட்பாட்டில் மென்மையான மொழியால் பாடப்படுவது அம்மை வனப்பு என்றும், தெரிந்தமொழி (அ) சேரிமொழியால் பாடப்படுவது புலன் வனப்பு என்றும் கூறிவிட்டு, அவற்றிற்கு எதிரான இலக்கணத்தை அழகு வனப்பிற்கு கூறியுள்ளதைக் காணமுடிகின்றது.

**தொன்மை வனப்பு**

'தொன்மை' என்பது 'பழமை' என்று பொருள்படும். தொல்பழங்காலத்து நிகழ்வுகளை மையமாகக்கொண்டு உரையும் பாட்டும் கலந்த நடையில் இயற்றப்பெறும் நூல்கள் தொன்மை வனப்பு என்னும் வகையில் அடங்கும். அதாவதுஈ பழைமையை மறவாத சூழல்களைத் தொன்மை வனப்பு எனலாம். இதனைத் தொல்காப்பியர்,

**"தொன்மை தானே**
**உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே" (தொல்.பொருள்.செய்.பேரா.நூ.549)**

என்ற நூற்பா மூலம் சுட்டுகின்றார். இளம்பூரணர், "தொன்மையாவது உரையொடு பொருந்திப் போந்த பழைமைத்தாகிய பொருண்மேல் வருவன" (இளம் உரை, அடிகளாசிரியர் பதிப்பு, ப.421) என்பார். இதற்குச் சான்றாக இராம சரிதம், பாண்டவ சரிதம் போன்றவற்றைக் கூறுகின்றார். அதாவது, நெடுங்காலத்திற்கு முன்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பொருளாகக் கொண்டு இயற்றப்பெறும் இலக்கியம் தொன்மை வனப்புடையதாகும் என்று கூறுகின்றார். பேராசிரியர், " தொன்மையாவது உரைவிராஅய்ப் பழமையாகியக் கதைப் பொருளாகச் செய்யப்படுவன" (பேரா உரை, இளவழகனார் பதிப்பு, ப.278) என்பார். இவர் பழைய வரலாற்றைப் பொருளாகக் கொண்டு உரையும் பாட்டும் விரவிய நடையில் இயற்றப்பெறுவது தொன்மை வனப்பு என்று கூறுகின்றார். சான்றாக பெருந்தேவனாரின் பாரதம், தகடூர் யாத்திரை போன்றவற்றைக் காட்டுகின்றார். நச்சினார்க்கினியர், "பேராசிரியர் கூறும் கருத்தினையே" (பேரா உரை, இளவழகனார் பதிப்பு, ப.248) எடுத்துக் கூறுகின்றார். ஆனால், சான்றாக சிலப்பதிகாரத்தைக் காட்டுகின்றார். சிலப்பதிகாரத்தில், "தொன்றுபடவரூஉந் தொன்மைத்தாகலின்" (சிலம்பு.ஊர்காண் காதை.அடி.45) என்று வருவதைக் காணலாம்.

தொன்மை வனப்பு பற்றிய நூற்பாவில் 'சொல்லுங் காலை' என்ற சொற்கள் பேராசிரியர், நச்சினார்க்கினியர் உரைகளில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் இருவரின் உரைகளில்,

**"தொன்மை தானே சொல்லுங் காலை**

**உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே"** **(தொல்.பொருள்.செய்.இளம்.நூ.229)**

என்ற அடிகளைக் கொண்ட நூற்பாவே காணப்படுகின்றது. இவர்களின் தொன்மைவனப்பிற்கானச் சான்றுகள் உரையிடையிட்டச் செய்யுள்களாக அமைந்துள்ளன. எனவே, நாட்டில் வழங்கும் பழைய புராணக் கதைகளையும், வரலாறுகளையும் பொருளாகக் கொண்டு பாடப்பெறும் தொடர்நிலைச் செய்யுள்கள் சார்ந்த இலக்கியங்கள் தொன்மைவனப்பாகும் என்ற கருத்தில் தொல்காப்பிய உரையாசிரியர்கள் அனைவரும் ஒத்த கருத்தினர் என்பது புலனாகின்றது.

க.வெள்ளைவாரணன், "உரையொடு புணர்ந்த பழமைப் பொருளாக வருவது தொன்மை என்னும் வனப்பாகும்" (உரைவளம்,ப.1023) என்பார். இவர் நெடுங்காலமாகச் சொல்லப்பட்டு, வழங்கிவரும் பழங்கதைகளைத் தொன்மை என்று கூறுகின்றார். இவ்வாறு தொடர்நிலைச் செய்யுட்களின் இடையிடையே உரை விரவி வருவன பழங்காலம் முதலே இருந்துள்ளன. அவற்றைத் தொன்மை வனப்புடையதாகக் கருதுகின்றனர். இவ்வனப்பிற்கு உரையாசிரியர்கள் மூவரும் கூறும் சான்றுகளில் இப்போது சிலப்பதிகாரம் மட்டுமே வழக்கில் உள்ளது. இந்நூலில் மட்டுமே இடையிடையே உரை வந்துள்ளது. ஆதலின் இந்நூல் 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. பிற்காலத்தில் வடநூலின் வழி எழுதப்பட்ட தண்டியலங்காரம், "உரையும் பாட்டையும் விரவியும் வருமே"(தண்டி.நூ.21) என்று காப்பிய இலக்கணம் குறித்துப் பேசுகின்றது. எனவே, தொல்காப்பியர் காலத்தே உரையிடையிட்ட பாட்டுடைத் தொடர்நிலைகள் மிகுதியாக வழங்கி வந்தன என்பது புலனாகின்றது. தனியே ஒரு பிரிவாகப் பிரித்து இலக்கணம் கூறுவதற்கு ஏற்றபடி பல இலக்கியங்கள் இருந்திருத்தல் கூடும் என்பதைத் தொல்காப்பியரின் தொன்மை வனப்பு மூலம் அறிய முடிகின்றது.

பிற்கால யாப்பிலக்கண நூலான யாப்பருங்கலம், "தொன்மையாவது பழைமைத்தாய் நிகழ்ந்த பற்றி உரைக்கப்படுவது" (யாப்பருங்கலம்,ப.141) என்று உணர்த்துகின்றது. இக்கருத்தினையே, "யாப்பருங்கல விருத்தியுரையும்"(ப.399), "யாப்பருங்கலக் காரிகையும்" (தமிழண்ணல் உரை.ப.2,2) முன்மொழிந்து கூறுகின்றன.

இவ்வாறு உரையாசிரியர்கள், அறிஞர்களின் உரைகளின் வழியாக முற்காலத்திலிருந்தே உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுட்களின் பெயர் அறியமுடியவில்லை. ஆனால் சங்க காலத்திலும், அதற்கு அடுத்து எழுந்த இராமாயணம், மகாபாரதம், தகடூர் யாத்திரை, சிலப்பதிகாரம் ஆகியவற்றைத் தொன்மை வனப்பிற்குச் சான்றாகக் காட்டுகின்றனர் என்பது

குறிப்பிடத்தக்கதாகும். எனவே, தொன்மை வனப்பு மக்களது கற்பனையின் விளைவே என்று கூறலாம்.

**தோல் வனப்பு**

இழும் என்னும் ஓசையை உடையதாக, மெல்லிய சொற்களால் உயர்ந்த பொருளைத் தரும் நிலையில் அமைவதும், பரந்தமொழியால் அடிநிமிர்ந்து வருவதும் தோல் என்னும் வனப்பாகும். இதனைத் தொல்காப்பியர்,

**“இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்**
**பரந்த மொழியால் அடிநிமிர்ந்து ஒழுகினும்**
**தோலென மொழிப தொன்மொழிப் புலவர்” (தொல்.பொருள்.செய்.பேரா.நூ.55,)**

என்ற நூற்பா மூலம் சுட்டுகின்றார். இளம்பூரணர், “இழுமென்மொழியால் விழுமிய பொருளைக் கூறினும் பரந்த மொழியால் அடிநிமிர்ந்து ஒழுகினும் தோல் என்னும் செய்யுளாம்” (இளம் உரை, அடிகளாசிரியர் பதிப்பு,ப.423) என்பார். இவ்வனப்பிற்குச் சான்றாக மார்க்கண்டேயனார் காஞ்சி, மலைபடுகடாம், கூத்தராற்றுப்படை ஆகிய நூல்களைக் காட்டுகின்றார். பேராசிரியர், “ மெல்லென்ற சொல்லான் அறம், பொருள் இன்பம் வீடென்னும் விழுப்பொருள் பயப்பச் செய்வன. அவை செய்த காலத்துள்ளன கண்டிலம். பிற்காலத்து வந்தன கண்டுகொள்க. இவை ஆசிரியப்பாட்டான் ஒரு கதைமேல் தொடுக்கப்பட்டன. அவை பொருட்டொடர் நிலை தோலென்று சொல்லுப புலவர்” (பேரா உரை, இளவழகனார் பதிப்பு, பக்.278-279) என்பார். மேலும் இவர், “ தொன்மொழிப் புலவர் என்பதைப் பழைய கதையைச் செய்தல் பற்றியது. தொன்மை வனப்பினுள் தொடர்புடையது” (மேலது,ப.279) என்றும் கூறுகின்றார். நச்சினார்க்கினியர், “பேராசிரியர் உரையினையே” (மேலது,ப.248) தழுவிச் செல்கின்றார். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருண்மைகளையும் மெல்லிய இனிய சொற்களால் அமைந்த கொச்சகக் கலியினால் செய்தலும், பரந்து விரிந்த சொல்லால் ஆசிரியபாட்டால் செய்தலும் தோல் என்னும் வனப்புடைய தொடர்நிலையாகும். பேராசிரியர் தரும் ‘கண்டிலம்’ என்பது செய்யுளின் பாவகைகளைக் குறிக்கின்றது. க.வெள்ளைவாரணன், “இழுமென்னும் ஓசையுடைய மெல்லென்ற சொல்லால் விழுமிய பொருள்பயப்பச் செய்யினும், பரந்த மொழியால் அடிநிமிர்ந்து வரத்தொடுப்பினும் அவை தோல் என்னும் வனப்புடைய செய்யுளாம்” (உரைவளம்,பக்.1026-1026) என்பார். இவர் இவ்வனப்பிற்குச் சிலப்பதிகாரத்தைச் சான்றாகக் காட்டுகின்றார்.

பிங்கல நிகண்டாசியர் தோல் வனப்பினைப் பற்றிக் கூறும்போது வனப்பு என்றும், தோல் வனப்பு என்றும் கூறுகின்றார். இதனை,

**“யானையும் வனப்பும் அதளும் தோல்வியும்**
**தோலென் றுரைப்பர் தோற்பல கையுமாம்” (பிங்.நூ.43)**

என்ற நூற்பாவின் மூலம் அறியலாம். இங்கு பல பொருட்களில் தொன்மை என்று கூறாமல் வனப்பு என்று எடுத்துரைக்கின்றார். திருக்குறள், "தொல்வரவும் தோலும்"(குறள்.1043) என்று கூறுகின்றது. சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார், "சிலப்பதிகாரம் தோல்வனப்பினைச் சார்ந்தது" (சிலம்பு.ப.123) என்று உரைக்கின்றார். எனவே, இத்தோல்வனப்பு இழுமென்மொழி, பரந்த மொழி பற்றி வரும் ஒருவகை வனப்பு என்பது புலனாகின்றது.

யாப்பருங்கலம், "தோலாவது இழுமென் மெல்லியவாய சொற்களால் விழுமியவாய்க் கிடப்பனவும் எல்லாச் சொற்களோடும் கூடிப் பலவடியும் மயங்கி வந்தனவாய்க் கிடப்பனவும் என இருதிறத்தனவாம், தோல் நிலையாமையைக் கூறும்" (யாப்பருங்கலம்,ப.142) என்று கூறுகின்றது. இக்கருத்தினையே, "யாப்பருங்கலக்காரிகையும்" (தமிழண்ணல் உரை.ப.33), "யாப்பருங்கல விருத்தியுரையும்"(ப.399) முன்மொழிந்து கூறுகின்றன. ஆகவே இனிய ஓசையுடன், மென்மையான சொற்களால் பலவடிகள் மயங்கி வந்து நிலையாமையினை உணர்த்தக் கூடிய செய்யுள் வகையும் தோல் என்ற வனப்பினைச் சாரும்.

**விருந்து வனப்பு**

'விருந்து' என்பது 'புதுமை' என்று பொருள் படும். புதிதாக வரும் யாப்பெல்லாம் விருந்து வனப்பு என்பதில் அடங்கும். இதனைத் தொல்காப்பியர்,

**"விருந்தே தானும்**
**புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"** **(தொல்.பொருள்.செய்.பேரா.நூ.551)**

என்ற நூற்பா மூலம் சுட்டுகின்றார். இளம்பூரணர், "முன்புள்ளார் சொன்ன நெறிபோய்ப் புதிதாகச் சொன்ன யாப்பின் மேலது" (இளம் உரை, அடிகளாசிரியர் பதிப்பு,ப.426) என்பார். அதாவது, புலவன் தனக்கு முன்னர் கவியியற்றியோரது யாப்பின் அடியொற்றி அல்லாமல் தானே புதியதொரு யாப்பினை அமைத்துக் கொண்டு பாடுவது விருந்து வனப்பு எனவும் இவை பெரும்பாலும் ஆசிரியப்பாவைக் குறிக்கும் எனவும் கூறுகின்றார். பேராசிரியர், "விருந்து தானும் புதிதாகத் தொடுக்கப்படுந் தொடர்நிலை மேற்று" (பேரா உரை, இளவழகனார் பதிப்பு, ப.279) என்பார். இவர் விருந்து என்னும் பொருள் பழையதாயினும் புலவன் தான் விரும்பிய புதிய யாப்பு வகையில் பல செய்யுட்கள் தொடர்ந்து வரச் செய்வதே விருந்து வனப்பு என்று கூறுகின்றார். சான்றாக முத்தொள்ளாயிரம், பொய்கையார் முதலிய அந்தாதிச் செய்யுட்கள், கலம்பகம் போன்றவற்றைக் காட்டுகின்றார். நச்சினார்க்கினியர், "புதிதாகத் தொடுக்கப்படுந் தொடர்நிலைச் செய்யுளின் மேற்று " (மேலது,ப.248) என்பார். சான்றுகள் பேராசிரியரைச் சார்ந்தே அமைந்துள்ளன. இவ்விருவரும் தோல் வனப்பு என்பது பழைய கதையைப் புதிதாகக் கூறுவது என்றும், விருந்து வனப்பு என்பது பழைய யாப்பினை விடுத்து புதிய யாப்பினை அமைப்பது என்றும் கூறி இவ்விரண்டிற்குமான வேறுபாட்டினைச் சுட்டிச் செல்கின்றனர்.

யாப்பருங்கலம், “புதியனவற்றைப் பாடுவது விருந்துவனப்பாகும்” (யாப்பருங்கலம்,ப.142) என்று உரைக்கின்றது. யாப்பருங்கலக்காரிகை மே.வி.வேணுகோபால் பிள்ளை பதிப்பில்,

**“வெதிர்புரை தோளாய் விருந்து தானே**

**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே” (யாப்.கா.வேணு.பதி.நூ.142)**

என்ற நூற்பா காணப்படுகின்றது. யாப்பருங்கல விருத்தியுரை, “விருந்து என்பது புதியவாயினவற்றின் மேற்று. அவை இப்பொழுது உள்ளாரைப் பாடும் பாட்டு” (யாப்.விருத்தியுரை,ப.400) என்று கூறுகின்றது. எனவே, விருந்து வனப்பு என்பது தற்பொழுது வாழும் மக்களைப் பற்றி பாடும் செய்யுட்களைக் கொண்ட இலக்கிய வகையாகும் எனலாம்.

**இயைபு வனப்பு**

இயைபு என்னும் வனப்பு செய்யுளின் இறுதியில் அமையும் மெல்லின, இடையின எழுத்துகளின் அடிப்படையில் இனங்காணப்படும். அதாவது ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு மெய்யெழுத்துகளில் ஏதேனும் ஒன்று ஈற்றில் பொருள் இயைந்தும், சொல் இயைந்தும் வருவன இயைபு வனப்பு எனலாம். இதனைத் தொல்காப்பியர்,

**“ஞகார முதலா னகார ஈற்றுப்**

**புள்ளி யிறுதி இயைபெனப் படுமே” (தொல்.பொருள்.செய்.பேரா.நூ.552)**

என்ற நூற்பா மூலம் சுட்டுகின்றார். இளம்பூரணர், “ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வரும் செய்யுள் இயைபென்னும் செய்யுளாம். இவ்வுறுப்புக்கு உதாரணம் வந்தவழிக் காண்க” (இளம் உரை, அடிகளாசிரியர் பதிப்பு,ப.428) என்று கூறுகின்றார். பேராசிரியர், “ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு புள்ளியீற்றினுள் ஒன்றனை இறுதியாகச் செய்யுஞ் செய்யுள் பொருட்டொடராகவும் சொற்றொடராகவும் செய்வது இயைபெனப்படும் என்றும், இயைபு என்றதனானே பொருளும் இயைந்து, சொல்லும் இயைந்து வருமென்பது கருத்து” (பேரா உரை, இளவழகனார் பதிப்பு, ப.279) என்றும் கூறுகின்றார். சான்றாக மணிமேகலையும், கொங்குவேளிராற் செய்யப்பட்ட தொடர்நிலைச் செய்யுளும் போல்வன. அவை னகரவீற்றின் இற்றன எனக் காட்டுகின்றார். மேலும் இவர், “இப்பொழுது அவை வீழ்ந்தன போலும்” (மேலது,ப.279) என்று கூறுகின்றார். இக்கூற்றை இவர் குறிப்பிடுவதன் மூலம் ஏனைய பத்து மெய்களும் ஈற்றில் அமையும் தொடர்நிலைச் செய்யுட்கள் கிடைக்கவில்லை என்பது நன்கு புலனாகின்றது. நச்சினார்க்கினியர், “ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு புள்ளியுள் ஒன்றனை யீறாகக் கொண்டு செய்யுளைப் பொருட்டொராகச் செய்வது இயைபெனப்படும்”(மேலது,ப.249) என்று உரைக்கின்றார்.

யாப்பருங்கலம், “இயைபென்பது ஞண நமன யரல வழள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வந்த பாட்டு” (யாப்பருங்கல்ம்,ப.142) என்று கூறுகின்றது. இக்கருத்தினையே, “ யாப்பருங்கலக்காரிகையும்”(தமிழண்ணல் உரை.ப.204), “யாப்பருங்கல விருத்தியுரையும்” (ப.400)

முன்மொழிந்து கூறுகின்றன. இவ்வாறு மெல்லினம் (ங் தவிர), இடையின புள்ளி எழுத்துகள் ஈற்றில் வந்து அமைவது இயைபு வனப்பு என்று இலக்கணம் உள்ளதே தவிர, இவற்றுக்கான இலக்கியம் மறைந்தது போலும் என்பது இடைக்கால உரையாசிரியர்களின் கருத்தாக உள்ளது. எனவே, இயைபு வனப்பிற்கு ஒற்றுகள் சிறந்த இலக்கணமாகும்.

தொல்காப்பியர் இயைபு என்னும் சொல் இலக்கணங்களை உணர்த்த வரும் போது இயைபுத்தொடை, இயைபுவண்ணம், இயைபுவனப்பு என்ற மூன்றினைக் குறிப்பிடுகின்றார். ‘ இயைபுத்தொடை’ என்பது அடிதோறும் இறுதி எழுத்தோ அல்லது இறுதிச் சீரோ ஒன்றி வருவதாகும். ‘இயைபு வண்ணம்’ என்பது இடையின எழுத்துகள் மிகுதியாக வருவதாகும். ‘இயைபு வனப்பு’ என்பது ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு புள்ளி எழுத்துகளுள் ஏதேனும் ஒன்று இறுதியில் வருமாறு அமைவதாகும். எனவே, தொல்காப்பியர் கூறிய இம்மூன்றிற்கும் சிறு சிறு வேறுபாடு உள்ளதை உணரலாம்.

**புலன் வனப்பு**

அனைவருக்கும் தெரிந்த மொழியால் சிறந்த நிலையில் ஆய்வு ஏதுமின்றி விளங்கும் நிலையில் அமைவது புலன் வனப்பாகும். அதாவது வழக்குச் சொல்லினால் பாடப்படுவது புலன் வனப்பு எனப்படும். இதனைத் தொல்காப்பியர்,

**“சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து**
**தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்**
**புலனென மொழிப புலனுணர்ந் தோரே” (தொல்.பொருள்.செய்.பேரா.நூ.553)**

என்ற நூற்பா மூலம் சுட்டுகின்றார். இளம்பூரணர், “வழக்குச் சொல்லினானே தொடுக்கப்பட்டு ஆராய வேண்டாமல் பொருள் தோன்றுவது புலன் என்னும் செய்யுளாம்” (இளம் உரை, அடிகளாசிரியர் பதிப்பு,ப.430) என்பார். எல்லோருக்கும் பொருள் தெரியும் வழக்குச் சொல்லால் ஆராய்ந்து அறியாமல் பாடப்படும் இலக்கியம் புலன் என்று கூறுகின்றார். சான்றாக, ‘பார்க்கடல் முகந்த பருவக் கொண்மூ’ என்ற பாடலைக் காட்டுகின்றார். பேராசிரியர், “சேரி மொழியென்பது பாடிமாற்றங்கள். அவற்றானே செவ்விதாகக் கூறி ஆராய்ந்து காணாமைப் பொருட்டொடரானே தொடுத்துச் செய்வது புலன்வனப்பு என்று சொல்லுவர் புலன் உணர்ந்தோர்” (பேரா உரை, இளவழகனார் பதிப்பு, ப.280) என்பார். பாடிமாற்றங்கள் என்பது சிற்றூர்ப் பேச்சு வழக்கு. இதனை கிராமிய வழக்கு என்றும் கூறலாம். அதாவது ஆராய்ந்து காணாமல் எளிதில் பொருள் விளங்கும்படி பாடுவது புலன் வனப்பு என்று கூறுகின்றார். சான்றாக, அவர் காலத்து நாடகச் செய்யுளால் அமைந்த விளக்கத்தார் கூத்து, எல்லோருக்கும் பொருள் இனிதே புலனாகும் நாடகத் தமிழுக்குரிய வெண்டுறைச் செய்யுள் ஆகிய நூல்களைக் காட்டுகின்றார். நச்சினார்க்கினியர், “பாடி மாற்றங்களானே செவ்விதாகக் கூறப்பட்டு ஆராய்ந்து காணாமை பொருள் தானே தோன்றச் செய்வது புலனென்று கூறுவர் அறிவறிந்தோர்” (மேலது,ப.249) என்பார். கிராமச் சொல்லால்

செம்மையாகப் பாடப்படுவதும், அவை எல்லோருக்கும் பார்த்ததும் பொருள் புரிவதும் புலன் வனப்பு ஆகும். சான்று பேராசிரியர் கூறியதைத் தழுவியே அமைந்துள்ளது.

யாப்பருங்கலம், "இயற்சொல்லால் பொருள் வெளிப்படையாகத் தோன்றச் சொல்லப்படுவது புலன்வனப்பாகும்"146 என்றும், "சேமொழிகளும், இயற்சொற்களும் பயின்று வருவது புலன்வனப்பாகும்"147 என்றும் உரைக்கின்றது. யாப்பருங்கலக்காரிகை, "மக்கள் வழங்கும் இயற்சொல்லால் பொருள் தோன்றச் செய்யப்படுவது புலன்வனப்பாகும்" (தமிழண்ணல்,ப.204) என்றும், யாப்பருங்கல விருத்தியுரை, "புலன் என்பது இயற்சொல்லாற் பொருள் தோன்றச் செய்யப்படும் பாட்டு" (யாப்.விருத்தியுரை,ப.400) என்றும் கூறுகின்றன. இவ்வாறு மக்கள் பேசுகின்ற இயற்சொற்களால் பொருள் எளிதில் புரியும்படியாகச் செய்யப்படும் இலக்கியவகை புலன் எனும் வனப்பின்பாற்படும். எனவே, புலன் வனப்பு என்பது மக்கள் பேசுகின்ற சொல் வழக்கிற்கேற்ப பேச்சு மொழிகளால் பாடப்படும் செய்யுள் வகை என்பது புலனாகின்றது.

**இழைபு வனப்பு**

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழி நெடிலடி ஆகிய ஐந்து அடிகளில் வல்லெழுத்தோடு சேர்ந்த வல்லொற்று மிகுதியாக வராமல் பிற எழுத்துகளோடு சேர்ந்து, உயர்ந்த ஓசை உடையதாய் வருவது இழைபு வனப்பாகும். இதனைத் தொல்காப்பியர்,

**"ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடங்காது**
**குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து**
**ஓங்கிய மொழியான் ஆங்கவண் மொழியின்**
**இழைபின் இலக்கணம் இயைந்த தாகும்" (தொல்.பொருள்.செய்.பேரா.நூ.554)**

என்ற நூற்பா மூலம் சுட்டுகின்றார். இளம்பூரணர், "ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடங்காது ஆசிரியப்பாவில் கோதப்பட்ட நாலெழுத்தாதியாக இருபதெழுத்தின் காறும் உணர்ந்த பதினேழு நிலத்தும் ஐந்தடியும் முறையானே வரத்தொடுப்பது இழைபு என்னும் செய்யுளாம்" (பேரா உரை, இளவழகனார் பதிப்பு, ப.280) என்பார். ஆசிரியப்பாவில் பேசப்பட்டுள்ள நான்கு எழுத்து முதல் இருபது எழுத்தின் வரையுள்ள உயர்வான பதினேழு நிலத்தில் வழங்கும் ஐந்தடியிலும் ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்து அதிகம் வராமல் பாடப்படுவது இழைபு என்று கூறுகின்றார்.

யாப்பருங்கலம், "இழைபாவது வல்லொற்று யாதும் தீண்டாமல் தொல்காப்பியர், எழுத்தெண்ணி அடி வகுக்கப்பட்ட குறளடி முதலாகப் பதினேழ் நிலத்து ஐந்தடியும் முறையானே உடைத்தாய் ஓங்கிய சொற்களால் வருவது" (யாப்பருங்கலம்.ப.142) என்று கூறுகின்றது. யாப்பருங்கலக்காரிகை, "இழைபு என்பது வல்லொற்று யாதும் தீண்டாது செய்யுளியலுடையதாய் எழுத்தெண்ணி அடி வகுக்கப்பட்ட குறளடி முதலாய் பதினேழ் நிலத்து ஐந்தடியாய் முறையாம் உடைத்தாய் ஓங்கிய சொற்களால் வருவது" தமிழண்ணல், காரிகை,ப.204) என்று கூறுகின்றது.

இக்கருத்தினையே, "யாப்பருங்கல விருத்தியுரை" (பக்.400-401) முன்மொழிந்து கூறுகின்றது. எனவே, தொல்காப்பியர் கூறிய எழுத்தெண்ணிக்கை அடிப்படையில் வகுக்கப்பட்ட குறளடி முதலாக ஐந்தடியும், வல்லொற்றுக்கள் வராமல் நீண்ட சொற்களால் அமைவது இழைபு வனப்பாகும்.

**நிறைவுரை**

தொல்காப்பியர் கூறிய முதற்நூற்பாவில் பின்னிறுதியாகக் கூறப்பட்ட எட்டு உறுப்புகளுக்கு 'வனப்பு' என்ற பெயர் வைத்து அழைக்கின்றார் பேராசிரியர். இளம்பூரணர், நச்சர் ஆகிய இருவரும் அவ்வாறு கூறவில்லை. பேராசிரியர் உரையில்தான் 'வனப்பியல் தானே வகுக்குங் காலை' என்ற அடியானது அம்மை வனப்பினை விளக்கும் நூற்பாவில் காணப்படுகின்றது. இளம்பூரணர், நச்சர் ஆகிய இருவரின் உரையில் இவ்வடி காணப்படவில்லை.

தொல்காப்பியத்தில் 'வனப்பு' என்ற சொல் இடம்பெறவில்லை. பிற்கால யாப்பிலக்கண நூலான யாப்பருங்கலக்காரிகையில்தான் 'வனப்பு' என்ற சொல் இடம்பெறுகின்றது. பிற்கால இலக்கண நூல்கள் வனப்பென்பது அழகு, அலங்காரம் எனப் பொருள்படும் என்று உரைக்கின்றன. இவை வனப்பலங்காரம் என்பதையும் வனப்பு என்பதையும் ஒன்றெனக் கருதுகின்றன.

தொல்காப்பியத்தில் வனப்பு செய்யுளியலிலும், பிற்கால யாப்பிலக்கண நூல்களில் ஒழிபியலிலும் கூறப்பட்டுள்ளது. மேலும் பிற்கால இலக்கண நூல்களான தண்டியலங்காரம், மாறனலங்காரம், வீரசோழியம், திருவள்ளுவமாலை, பிங்கல நிகண்டு போன்றவைகளில் வனப்பினைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

இளம்பூரணர், காரிகையாசிரியர், விருத்தியாசிரியர் போன்றோர் எண்வகை வனப்புகள் தனிப்பாடலுக்கு உரியன என்று கூறுகின்றனர். பேராசிரியர் மட்டும் தொடர்நிலைப் பாடலுக்கும் இவை உரியன என்று கூறுகின்றார். பிற்கால யாப்பிலக்கண நூல்கள் வனப்பினை யாப்பு, யாப்புவனப்பு, யாப்பலங்காரம், வனப்பு என்று பொதுவாகக் கூறுகின்றன. எண்வகை வனப்புகள் ஒவ்வொன்றும் இலக்கியச் செய்யுளின் அழகியல் உணர்வினை நிலைநாட்டுவதற்காகப் பாடப்பட்டுள்ளன என்பது இக்கட்டுரையின்வழி பெறப்பட்ட உண்மைகள் ஆகும்.

**துணைநின்ற நூல்கள்**

1. வேணுகோபால் பிள்ளை (ப.ஆ), 1978, யாப்பருங்கலம் – விருத்தியுரை, கௌரா வெளியீடு, சென்னை.
2. வெள்ளைவாரணன்.க, 1989, தொல்காப்பிடம் செய்யுளியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழம், மதுரை.
3. திருஞானசம்பந்தம், 2012, தண்டிலங்காரம் – தெளிவுரை, கதிர் பதிப்பகம், திருவையாறு.
4. தமிழண்ணல், 2010, தொல்காப்பியம் – செய்யுளியல், மரபியல் தொகுதி -4, மீனட்சி புத்தக நிலையம், மதுரை.

5. தமிழண்ணல், 2011, யாப்பருங்கலக்காரிகை புதிய முறை, எளியவுரை, மீனட்சி புத்தக நிலையம், மதுரை.
6. ஜகந்நாதன்.கி.வா, 2012, தமிழ்க் காப்பியங்கள், முல்லை நிலையம், தி.நகர், சென்னை.
7. அடிகளாரிசியர் (ப.ஆ), 1985, தொல்காப்பியம் – பொருளதிகாரம், செய்யுளியல், இளம்பூரணர் உரை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
8. இளவழகன்.கோ (ப.ஆ), 2003, தொல்காப்பியம்- பொருளதிகாரம், நச்சினார்க்கினியர், தமிழ் மண் பதிப்பகம், தி.நகர், சென்னை.
9. இளவழகன்.கோ (ப.ஆ), 2003, தொல்காப்பியம்- பொருளதிகாரம், பேராசிரியம்-2, செய்யுளையல், தமிழ் மண் பதிப்பகம், தி.நகர், சென்னை
10. கோவிந்தராஜ முதலியார் (ப.ஆ), 2011, வீரசோழியம் – பெருந்தேவனார் உரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி), லிட், சென்னை.
11. பரிமேலழகர் (உ.ஆ), திருக்குறள், சாரதா பதிப்பகம், G-4, சாந்தி அபார்ட்மெண்ட், 2, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, அஜந்தா ஹோட்டல் அருகில், இராயப்பேட்டை, சென்னை – 600014


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**ராஜபாண்டி.பா “ தொல்காப்பியரின் வனப்புக் கோட்பாடும் பிற்கால இலக்கண நூல்களும்”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 1, இதழ் 1, ஏப்ரல் 2021, பக். 34-47

**Cite this Article in English**

**Rajapandi, P. “ Tholkappiyar's Vanappu theory and later grammars”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.1 Issue 1, April 2021, pp. 34-47